Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

ஈழமுரசு

முரசு 2 13-6-1985 வியாழக்கிழமை (வைகாசி 31 றம்ழாண்23) முழக்கம்128

திருமலை நிலை: நரசிம்மராவுக்கு அமிர் ரெலிபோனில் விளக்கினார்

(சென்னை)

பிரதமர் ராஜீவ் காந்தியுடன் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கும் பாரத பாதுகாப்பு அமைச்சர் நரசிம்மராவுடன், கூட்டணிச் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு இலங்கையில் தற்போது நடைபெறும் சம்பவங்களை எடுத்துரைத்தார். முக்கியமாக திருமலை, மூதூர் பகுதிகளில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் தினசரி பிரச்சினைகளை எடுத்துக் கூறினார். இரு நாட்டுத்தலைவர்களினதும் உச்சி மகா நாட்டுக்குப் பின்னரும், திட்டமிட்டு நடைபெறும் இவ்வாறான செயல்களையிட்டு தமிழ் மக்கள் கலக்கமடைய நேர்ந்துள்ளதாகவும் திரு. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

★ நேற்றைய அமைச்சரவையின் முக்கிய விடயம்:

தாக்குதலைத் தொடராக நடத்த புலிகள் திட்டம் நாடெங்கும் பலப்படுத்தப்பட்ட பாதுகாப்பு!

(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வு காணும் முகமாக தீவிரவாதச் செயல்களை நிறுத்த முயற்சிக்கும் ஏனைய தீவிரவாத இயக்கங்களுடன் இணைய பிரபாகரன் தலைமையிலான விடுதலைப் புலிகள் இயக்கம் மறுப்புத் தெரிவித்துள்ளதாக தேசிய பத்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்ட முடிவில் செய்தியாளர்களிடம் இது பற்றி அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் தெரிவிக்கையில் அமைச்சர் அத்துலத் முதலி தெரிவித்த இத்தகவல் பற்றி அமைச்சரவை விரிவாக ஆராய்ந்தது என்றும் கூறினார்.

அமைச்சர் அல்விஸ் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பிரபாகரன் தலைமையிலான தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் பல்வேறு தாக்குதல்களை

—6-ஆம் பக்கம் பார்க்க

கண்ணிவெடிக்கு பொலிஸும் 4 ராணுவ வீரரும் மூதூரில் பலி!

கிராமத் தாக்குதலில் 14 பேர் மரணம்; அச்சத்தால் பொது மக்கள் வெளியேற்றம்

(திருமலை)

மூதூரிலுள்ள வெகிவத்த என்ற இடத்தில் நேற்றுக் காலை நிலக் கண்ணிவெடித் தாக்குதலால் வாகனத்தில் சென்ற நான்கு ராணுவத்தினரும், ஒரு பொலிஸும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினமிரவு நடந்த தாக்குதலொன்றில் 14 சிங்களவர்கள் மரணமடைய நேர்ந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

கிராம மக்கள் மரணமான இடத்திற்கு ராணுவமும், பொலிஸும் மூதூர் நீதவான், மாவட்ட வைத்திய அதிகாரி ஆகியோருடன் சென்று கொண்டிருந்தபோதே கண்ணிவெடித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாம்.

நீதவானும், வைத்திய அதிகாரியும் உயிர் தப்பி காட்டிற்குள் ஓடியதாகவும் கூறப்படுகின்றது. வெகிவத்த கிராமத்

— 6ஆம் பக்கம் பார்க்க

குருநகர் உணவு களஞ்சியம் மூடுவிழா

குருநகரிலுள்ள உணவுக் களஞ்சியத்தை மூடிவிடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாரத்தில் அடுத்தடுத்து இரு தடவைகள் நடைபெற்ற கொள்ளைகளே இதற்குக் காரணமாகும்.

இங்கிருக்கும் மிகுதி உணவுப் பொருட்களை பாதுகாப்பான வேறு இடத்திற்கு எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

சுமார் மூன்று லட்சத்திற்கும் அதிகமான ரூபா பெறுமதியான அரிசி, சீனி ஆகியவை இங்கு கொள்ளையடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

ராஜீவுக்கு வெள்ளைமாளிகை ஆடம்பரமான வரவேற்பு

(வாஷிங்டன்)

பாரதத்துக்கும் அமெரிக்காவுக்கு மிடையிலான கருத்து வேறுபாடுகள் நீங்க பிரதமர் ராஜீவ் காந்தியின் அமெரிக்க விஜயம் உதவுமென ராஜீவுக்கு நேற்று வெள்ளை மாளிகையில் அளிக்கப்பட்ட வரவேற்பில் பேசும் போது ஜனாதிபதி றீகன் தெரிவித்தார்.

பிரதமர் ராஜீவ் காந்தியும் தமது பதிலுரையில் இதனை ஆமோதித்துப் பேசினார்.

---- 6ஆம் பக்கம் பார்க்க

'நன்மை விரும்பிகளின்' தீவிர முயற்சியால் கொள்ளைபோன அரிசிமூடைகள் வருகின்றன

யாழ்ப்பாணத்தில் வாழும் பொது மக்களின் 'நன்மை விரும்பிகள்' சிலரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பலனாக, குருநகர் களஞ்சியத்தில் கொள்ளையடிக்கப்பட்ட அரிசி மூடைகளில் ஒரு குறிப்பிட்ட தொகை மீளப் பெறப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அரசாங்க அதிபர் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட 'நன்மை விரும்பிகள்' எடுத்த துரித முயற்சியினால் மீட்கப்பட்ட அரிசி மூடைகள் லொறி மூலம் பொறுப்பு வாய்ந்தவர்களிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவைகளை வேறொரு பாதுகாப்பான இடத்தில் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்

- 6 ஆம் பக்கம் பார்க்க

வெரித்தாஸ் அறிவிப்பு

இலங்கை கடற்படையின் ரோந்துப்படகு ஒன்று சென்றவார இறுதியில் இந்தியக் கடல் எல்லைக்குள் சென்று

—6ஆம் பக்கம் பார்க்க

தனியார் வாகனங்களுக்கு இன்றும் 5லீட்டர் பெற்றோல்

தனியார் வாகனங்களுக்கும் யாழ் மாநகர பல நோக்கக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் விற்பனை நிலையம் மூலம் இன்றும் ஐந்து லீட்டர் பெற்றோல் வீதம் வழங்க அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

85ம் ஆண்டுக்கான வாகன இறைவரி உத்தரவுப்பத்திரம், வாகன உரிமைக்கும் பாவனைக்குமான பத்திரங்களுடன் வங்கியில் பணம் செலுத்திய பின்னர் பெற்றோலை கொள்வனவு செய்ய முடியும்.

அரசாங்க அதிபரின் பர்மிட் எதுவும் தேவையில்லை. கொள்கலன்களில் பெற்றோல் வழங்கப்படமாட்டாது.

பிரதமர் வெளியிட்ட தகவல்:

கிராமிய பாராளுமன்ற ஆட்சியை ஏற்படுத்த அரசாங்கம் யோசனை!

(நிவித்திகல)

"கிராமியப் பாராளுமன்ற அமைப்பொன்றை ஏற்படுத்தி நாட்டைத் தற்போது எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் ஆராய்ந்து வருகிறது" என்று பிரதம மந்திரி ஆர். பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

தமது இந்த யோசனை ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் நாட்டைத் இன்று எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முடியுமென தான் நம்புவதாகவும் பிரதம மந்திரி கூறினார்.

நிவித்திகல தொகுதியில் நடைபெற்ற அங்குரார்ப் பண வைபவம் ஒன்றில் உரையாற்றுகையில் 'கிராமியப் பாராளுமன்ற அமைப்பு சம்பந்தப்

—6 ஆம் பக்கம் பார்க்க

ஈழத் தமிழர் வெளியேற்றம்

சிங்கப்பூரில் தொழில் பார்க்கும் இலங்கைத் தமிழர்கள் பலர் இலங்கை தமிழ்த்தீவிரவாத இயக்கங்களுடன் தொடர்பு கொண்டிருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் அங்கிருந்து வெளியேறுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

விமானம் குண்டு வைத்து தகர்ப்பு

59 பயணிகளுடன் கடத்தப்பட்ட ஜோர்டான் விமானம் பெய்ரூத்தில் வைத்து நேற்று

...6ஆம் பக்கம் பார்க்க

இன்று முதல் மூன்று நாட்கள்

யாழ். பல்கலைக் கழகத்தில் பனைவள ஆய்வும், காட்சியும்

(சுண்டுக்குளி)

யாழ், பல்கலைக் கழகமும், இலங்கை பனை அபிவிருத்திச் வபையும் இணைந்து மூன்று சனங்கள் நடாத்தும் பனை திள உற்பத்திக் கண்காட்சியும், ஆய்வரங்கும் இன்று ஆரம்பமாகி 15-ம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இன்று காலை 9 மணிக்குக் கண்காட்சியை யாழ். பல்

—6-ஆம் பக்கம் பார்க்க

சந்தை வேலை பூர்த்தி

(சுழிபுரம்)

சுழிபுரம் வடக்கம்பரையில் சுமார் 10 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வந்த நவீன சந்தைக் கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையை அடைந்துள்ளன. இரண்டு மாடிகள் கொண்டதாக இக் கட்டடம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

விழிப்புக் குழு கைது செய்தது

நல்லூர் முதலிரசந்தைப் பகுதியில் தந்திக் கம்பிகளை களவாக வெட்டியவர்களை நாயன்மார்கட்டு விழிப்புக் குழுவினர் கைது செய்து, அவர்களின் பெற்றோரை அழைத்து, புத்திமதி கூறி ஒப்படைத்தனர்.

அசுத்தமாகும் கிளிநொச்சி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகர் முன்னால் வாத படிக்கு மிகுந்த குப்பை கூளங்களுடன் காணப்படுகின்றது. முக்கியமாக கிளிநொச்சி சந்தையும் அதன் சுற்றுப்புறமும் மிகவும் அசுத்தமாகக் காணப்படுகின்றது. அது குறித்து கிளிநொச்சிப்பட்டினசபை ஊழியர்களிடம் கேட்டபோது பட்டின சபைக்குச் சொந்தமான ஒரேயொரு குப்பை ஏற்றும் ட்ராக்டர் சில வாரங்களுக்கு முன் இனந் தெரியாத சிலரால் களவாடப்பட்டதாகவும் இதனால் இந்த வேலைகள் செய்ய முடிந்த கிராம மேற்பட்டுள்ளதாகவும் கூறினர்.

மாயக்கிருஷ்ணனின் படகுக்கு நேர்ந்த கதி

(மருதங்கேணி)

உடுத்துறைப் பகுதியில் இருந்து மீன்பிடிக்கவென தொழிலுக்குச் சென்ற மீன்பிடிப் படகு ஒன்று பாரிய கப்பல்களில் வந்தவர்களால் மோதப்பட்டு மூழ்கடிக்கப்பட்டுள்ளது.

படகில் இருந்தவர்கள் சாதுரியமாகக் கடலில் பாய்ந்து தம் உயிரைக் காப்பாற்றியுள்ளனர். பின் இவர்கள் கரைக்கு நீந்திவந்து, வேறு பல படகுகளையும் துணைக்குக் கூட்டிச் சென்று தங்களின் மூழ்கடிக்கப்பட்ட படகை கரைக்கு இழுத்து வந்துள்ளனர்.

அதிகமான மீன்களுடன் கரையைநோக்கிவந்துகொண்டிருந்த இந்த படகின் வெளி இணைப்பு இயந்திரம் அதிர்ஷ்டவசமாக வலைகளுக்கிடையே சிக்குண்ட நிலையில் எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் படகின் உரிமையாளர் உடுத்துறையை சேர்ந்த மாயக்கிருஷ்ணன் என்பவர் ஆவார்.

வருடாந்த உற்சவம்

(மருதங்கேணி)

வரலாற்று புகழ்மிக்க வெற்றிலைக்கேணி புனித. அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் இருபத்தோராம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் என இதன் பங்குத் தந்தை வண. பிதா லமைக்கல் சௌந்தரநாயகம் தெரிவித்துள்ளார்.

வரி விளம்பரம்

காணவில்லை

ஒரே ஊரில் வசிப்பவர்களும் வயது 14, 13, 12 உடைய ஒரு பெண் இரு ஆண் வேலைக்காரப் பிள்ளைகள் 10. 6. 85 தொடக்கம் காணாமல் போய் விட்டார்கள். இவர்களைக் கண்டவர்கள் தயவு செய்து பின் வரும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
திருமதி சொர்ணமலர் கணபதிப்பிள்ளை நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

ஏலவிற்பனை

இம்மாதம் 15ம் திகதி சனிக்கிழமையும், 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் காலையிலிருந்து பலவித பொருட்கள் யாழ்ப்பாணம் கல்லியங்காட்டுச் சந்தையில் விற்பனையாகும். உங்களிடம் விற்பனைக்கிருக்கும் பொருட்களையும் அனுப்பி வைக்கலாம். ஏல விற்பனை நிலையம், கோப்பாய்.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

✻ அரியாலை வில்வந்தெருவைச் சேர்ந்த களஞரட்ணம் சுலோசனாதேவி தம்பதிகளின் மகள் கௌசிகா இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ உடுப்பிட்டி கிறேஸ்லேன் வீதி பேரின்பநாதன் செல்வராணி தம்பதிகளின் மகன் ராதாரமாளன் இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ பாஷையூர் பொன்ராசா பிலோமினம்மா தம்பதிகளின் மகள் அனிக்சன் இன்று தனது நான்காவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ வல்வெட்டி கொத்தலாவ கட்டி முருகேசு சோதிரத்தினம் தம்பதிகளின் மகள் வாசுகி இன்று தனது பதினேராவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ பாஷையூர் துரைரெத்தினம் பத்மாவதி தம்பதிகளின் மகள் டெனிமா அன்ரனிஸ்ரா இன்று தனது ஏழாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

✻ யாழ். மாவிப்பாய் வீதி எம். ஜீ. பஷீர் சுல்பா பஷீர் தம்பதிகளின் மகன் றில்காஸ் பஷீர் இன்றுதனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ யாழ். கோவில் வீதி செல்வரசா தம்பதிகளின் மகன் அத்தனிஸ் இனஸ்ரன் இன்று தனது பிறந்த நாளை கொண்டாடுகிறார்.

✻ யாழ்-நாவலர் வீதி பிரான்சிஸ் சேவியர் சாந்தி தம்பதிகளின் மகள் கிளாரி ரேணுகா இன்று தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ பூநகரி அத்தாய் செல்வநாயகம் லீலாவதி தம்பதிகளின் மகன் யூதரன் இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ நயினாதீவு தர்மலிங்கம் மாணிக்கபூபதி தம்பதிகளின் மகன் கோமேசன் இன்றுதனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

பயிற்சி வகுப்பு

(செம்பியன்பற்று)

வாக்காளர் இடாப்புகளைத் தயார் செய்வதற்கான பயிற்சி வகுப்பு அண்மையில் பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இடம் பெற்றது.

இராம சேவகர்களுக்கான மேற்படி பயிற்சி வகுப்புகளை யாழ். தேர்தல் காரியாலயத்தைச் சேர்ந்த திரு. இ. நாகேந்திரம் நடத்தினார்.

காணவில்லை

ஹேமநாத் (ஹேமா)

அரியாலை சுப்பிரமணியம் வீதியைச் சேர்ந்த மேற்கண்டவரை 21. 5. 85 தொடக்கம் காணவில்லை. இவர் ஒரு மன நோயாளி. இவரைப் பற்றிய ஏதும் தகவல் தெரிந்தால் துயருறும் அம்மாவுடன் தொடர்பு கொள்ளவும்.

திருமதி. க. ராசமணி
28, சுப்பிரமணியம் வீதி, அரியாலை.

டைனமிக் எஞ்ஜினியரிங் லிமிற்றெட்

முகவரி மாற்றம்

எமது அலுவலகம் பின்வரும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது. இல. 476, பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(சென்ற் ஜோன்ஸ் கல்லூரிக்கு முன்பாக)

31-ம் நாள் நினைவஞ்சலி

பரமநாயகி கனகசபை

சமஸ்கிருத சிறப்புக் கலைப் பட்டதாரி,
பேராதனைப் பல்கலைக் கழகம்,
முன்னாள் ஆசிரியை சாஹிராக் கல்லூரி.

அவரின் பெற்றோர்கள் சாவகச்சேரியைச் சேர்ந்த சட்டத்தரணி திரு. வே. கனகசபை, திருமதி லீலாவதி கனகசபை, அன்னாரின் சகோதரிகள் திருமதி சாந்தா வாமதேவா (ஆசிரியை, பேசாலை பத்திமா மகா வித்தியாலயம்) திருமதி வேதா சிவதாசன் (குடும்ப ஆலோசக அதிகாரி, மாவட்ட நீதிமன்றம் வவுனியா) காலம் சென்ற நவரத்தினராஜா (சட்டமா அதிபர் திணைக்களம் கொழும்பு). நதி, அற்புதா, புனிதா வீமவேற்பிள்ளை (முன்னாள் வைத்திய அதிகாரி, அரசினர் வைத்தியசாலை நாவலப்பிட்டி) மீனா (சட்டத்தரணி, விவேகானந்தராஜா (வர்த்தக வங்கி, யாழ்ப்பாணம்).

அவரின் மைத்துனி, மைத்துனர்கள் சிவதாசன் (வைத்திலிங்கம் அன் கொம்பெனி கொழும்பு) காலம் சென்ற வாமதேவா (நொதேண் இன்டஸ்றீஸ் யாழ்ப்பாணம்) திருமதி சு. நவரத்தினராஜா, வீமவேற்பிள்ளை (லண்டன்) யாபேரும் தமது உற்றார், உறவினர், நண்பர்களை அன்னாரின் இல்லம் "பிருந்தாவனம்" கொடிகாமத்தில் நடைபெறும் அவரது 81வது நினைவு தினமாகிய 13-6-85ல் கலந்து தங்கள் செல்வத்தின் ஆன்மா சாந்தி யடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி வேதா சிவதாசன்,
குடும்ப ஆலோசக அதிகாரி,
மாவட்ட நீதிமன்றம்,
வவுனியா.

GLOBE INDUSTRIES

எமது ஸ்தாபனம் நாலாம் குறுக்குத் தெரு வேம்படி வீதி சந்திப்பில்
புதிதாக அமைந்துள்ள கட்டிடத்தில் இன்று (13.6.1985) மீண்டும் ஆரம்பமாகிறது என்பதை
எமது வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும்
அறியத்தருகின்றோம்.

தற்போதைய நாட்டு நிலையைப் பொறுத்து எமது வாடிக்கையாளர்களுக்கும் நண்பர்களுக்கும் தனிப்பட்ட அழைப்பிதழ் தந்து வரவேற்க முடியாமைக்கு வருந்துகிறோம். நன்றி.

குளோப் இன்டஸ்றீஸ்

12-173, நாலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 23187

உலக நாடுகள் அனைத்திற்கும் உடனடி அழைப்பு !

இன்றைய பயங்கரச் சூழ்நிலையிலும்
வழமைபோல் 24 மணி நேரமும்!

எந்நேரமும், எந்நாளும், உலகளாவிய
ரெலிபோன் அழைப்புக்களை தங்குதடையின்றி

குளோபல்

பெற்றுத்தருகிறது

குளோபலைக் கூப்பிட:- 23249 (ஆறு தொடர்புகள்)

EUROLANKA TRAVELS LTD.

40, 3ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

(குறிப்பு: யாழ் பிரதான வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கிளைக்கு அருகாமையில் உள்ள வீதியில்)

கொழும்பு / பேர்லின் (COLOMBO / BERLIN)

(17, 24ம் திகதிகளில் குறைந்த கட்டணத்துடன் விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது)

பாங்கொக் (BANGKOK ஊடாக AEROFLOT விமானத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது)

அத்துடன்,

மெற்றுஸ், திருச்சி, சிங்கப்பூர், கோலாலம்பூர்

மற்றும் இடங்களுக்கும் பிரயாணம் செய்வதற்கான ஒழுங்குகள் செய்து தரப்படும்

1) ஒவ்வொரு நிங்கட்டிமைகளிலும் பயணம் செய்யலாம்,
2) யூன் (June) 17, 24 ஆம் திகதிகளில் பயணம் மேற்கொள்ள உடன் தொடர்பு கொள்ளவும்.
3) குடும்பத்தினருக்கு பிரயாணம் செல்லும் வரை எதுவித கஷ்டமும் இன்றி கொழும்பில் நிறமையான ஹோட்டல்களில் (HOTELORCHARD) இல் தங்குமிடவசதிகள் மிகக்குறைந்த கட்டணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. தனியாகச் செல்லும் பிரயாணிகளுக்கும் தங்குமிட வசதிகள் மிகக்குறைந்தகட்டணத்தில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
4) கொழும்பில் இருந்து கட்டுநாயக்கா செல்வதற்கு போக்குவரத்து சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
5) சுற்றுலாசோக்கள் (Travellers Cheques) இலவசமாக எடுத்துத் கொடுக்கப்படும்.
6) BONDING, PASSPORT முதலிய எடுப்பதற்கு சகல உதவியும் செய்து கொடுக்கப்படும்.
7) BERLIN போகும் பிரயாணிகளுடன் எமது பிரதிநிதி ஒருவர் எமது தலைமைக் காரியாலயத்தில் இருந்து BANGKOK வரையும் சென்று AEROFLOT இல் பயணம் அனுப்பும் வரை எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பார். உடனடி பாகத் தொடர்பு கொள்ளவும்.
8) யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வதற்கும் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கிளைகள்: 1) இலங் மாளிகை லிமிட்டெட்
166 (80) K.K.S Rd. யாழ்ப்பாணம்
தொலைபேசி : 21837

2) V.J.S. (Express)
C/o ஸ்ரீமஹால் ரேட்ஸ்,
158, அஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 23572

3) லிப்ரஸ் லிமிட்டெட்,
R. G. பில்டிங்
70, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

தலைமை அலுவலகம்

EUROLANKA TRAVELS LTD.

6A, Daisy Villa Avenue, Colombo 4.

தொலைபேசி : 585990, 589992.

உதய சிந்தனை

சுதந்திரத்தை மறுதலிப்பதென்பது ஒருவன் மனிதன் என்ற தனது தகுதியையே மறுதலிப்பதாகும். -- ஜூலோ

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி 23336

இதய ஒலி

13-6-1985 வியாழக்கிழமை (குரோதன வைகாசி 31)

அகில உலகுக்கும் தெரிந்த உண்மை

இலங்கை-இந்திய தலைவர்களுக்கிடையேயான உச்சிமகாநாடு நடைபெற்று முடிந்த சில தினங்களுக்குள்ளேயே, கிழக்கிலங்கையில் இடம்பெற்ற மிருகத்தனமான, மிலேச்சத்தனமான சம்பவங்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளன.

இனப்பிரச்சினைக்கு சமுகமான அரசியல் தீர்வு காண்பதற்கான நல்ல சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டுமென்று கூறியவர்கள் மூதூரில் நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டதையும், வீடுகள் எரிக்கப்பட்டதையும் கண்டு வானாவிருந்தனர்.

நல்ல பாதுகாப்புடன் தமிழ் கிராமங்களுக்குள் சென்ற குண்டர்கள் அப்பாவித் தமிழர்களை அடித்துத் துரத்தியதால் பல்லாயிரக்கணக்கானவர்கள் அகதிகளாக்கப்பட்டுள்ளனர்.

காடுகளுக்குள் புகலிடம் தேடிச் சென்ற சுமார் ஐயாயிரம் பேர் இன்னமும் தமது வீடுகளுக்குத் திரும்பவில்லை என்று கடைசியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாதிக்கப்பட்ட கிராமங்களுக்குச் சென்று, நிலைமைகளை நேரில் அவதானித்த பி. பி. ஸி நிருபர் தெரிவித்துள்ள தகவல்களுக்கு உலகப் பத்திரிகைகளிலும், வானொலிகளிலும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து வெளிவரும் 'ஐலண்ட்' பத்திரிகைகூட எண்பது பேர் கொல்லப்பட்டதாகவும், இருநூறு பேரைக் காணவில்லை என்றும் முன்பக்கச் செய்தி வெளிவிட்டிருந்தது.

ராஜாங்க அமைச்சின் தணிக்கை அதிகாரிகளின் 'கத்தரிக்கோல்' அனுமதி கொடுத்த பின்னரே இந்தச் செய்தி பிரசுரிக்கப்பட்டது.

'ஐலண்டை' மேற்கோள்காட்டி அகில இந்திய வானொலி உட்பட பல வெளிநாட்டுச் செய்தி முகவர் நிலையங்கள் இதனை வெளியுலகுக்குக் கொண்டு வந்தன.

அதன் பின்னர் தேசிய பத்தோபஸ்து அமைச்சு, "ஐலண்ட்" செய்தியைத் தவறானது என்று தெரிவித்து பத்திரிகை அறிக்கையொன்றை வெளியிட்டது.

தணிக்கைக்குப் பொறுப்பான ராஜாங்க அமைச்சின் அதிகாரிகள் சரியானதெனத் தெரிந்த பின்னர் பிரசுரிப்பதற்கு அனுமதித்த செய்தியை, இருபத்து நான்கு மணித்தியாலங்களின் பின்னர், பாதுகாப்புக்குப் பொறுப்பான தேசிய பத்தோபஸ்து அமைச்சு அதிகாரிகள் 'பிழையான செய்தி' என்று தெரிவித்துள்ளது விந்தையானதாகும்.

மறுப்புவந்த பின்னரும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் அதனை விடவில்லை.

சிலர் நேரிலேயே திருமலை, மூதூர் பகுதிகளுக்குச் சென்றுள்ளனர் முன்னர் கிடைத்ததிலும் பார்க்க, பல பிந்திய தகவல்களையும் இவர்கள் கொற்று மீண்டுள்ளனர்.

பாதுகாப்பில்லை என்று காரணம்காட்டி வெளிநாட்டு பத்திரிகையாளர்களை வடக்கே செல்ல அனுமதிக்காது தடுப்பதுபோல கிழக்குக்கும் செல்லவிடாது தடுக்க முடியாது போனதால், பல உண்மைகளை உலகம் அறிய நேர்ந்தது.

மிக மிக முக்கியமான நான்கு பேர் மல்லிகைத் தீவு பகுதியில் மரணமானது ஆதாரபூர்வமாகத் தெரியவந்ததாக பி. பி. ஸி. நிருபர் அறிவித்துள்ளார்.

அனைத்து நாடுகளும் அறிய நேர்ந்த இந்த அதாகரிகப் படுகொலைகள் பற்றி பாரத வெளியுறவு இலாகா வெளிநாட்டிலிருக்கும் தங்கள் பிரதமருக்கு அறியக் கொடுத்த ஜனநாயக நடவடிக்கையை அனைவரும் வரவேற்கவே செய்வர்.

இதனால், அஸ்ஜீரியாவில் நேற்று மூன்றினம் நின்ற பாரதப் பிரதமர் ராஜீவ் கொழும்பிலுள்ள தமது நாட்டுத் தூதுவருடன் தொடர்பு கொண்டு பல்வேறு விபரங்களையும் பெற முடிந்தது.

மேலதிகமான பல தகவல்கள் இங்கிருந்து வாஷிங்டனுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

தமது ஐந்து நாள் அமெரிக்க விஜயத்தின்போது, இலங்கை விடயத்துக்கு ராஜீவ் எவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பாரென்பதை இதன் மூலம் ஓரளவு உணரமுடிகின்றது.

பாரதப் பிரதமரின் நன்முயற்சிகள் பூரண வெற்றியளிக்குமென நம்புவோம்.

நெடுந்தீவில் பலியானவர்களுக்கும் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்

பருத்தித்துறை பிரஜைகள் குழு மகஜர்

அனுராதபுரத்தில் மே மாதம் 14ஆம் திகதி சம்பவித்த துயரார்ந்த அசம்பாவிதங்களுக்குப் பலியானோரின் குடும்பத்தினருக்கு நட்ட ஈடு வழங்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தை வரவேற்று, பருத்தித்துறை பிரஜைகள் குழு, ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அதே சமயம், அவற்றுக்குக் காரணராக இருந்தோரையும் அது திட்டவட்டமாகக் கண்டித்தும் உள்ளது.

அனுராதபுரத்தைச் சேர்ந்த அப்பாவிக் குடிஜனங்கள் மீது புரியப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை அங்கே கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்கள், அனுராதபுர இராணுவ முகாமில் நிகழ்த்தப்பட்ட சோகமிக்க சம்பவங்கள், ஆகியவற்றினால் பலியானோர், பாதிக்கப்பட்டோர் தொடர்பிலும் அதே போல நஷ்டஈடு வழங்குமாறும் இங்கு கேட்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானுக்குச் சென்ற, உரிய அதிகாரப்பத்திரம் வழங்கப்பெற்ற, படகில் இருந்த பிரயாணிகளுக்கு நேர்ந்த விதியையும் இதே அனுதாபத்துடன் மனிதாபிமானக் கண்கொண்டு நோக்கி, நஷ்டஈடு வழங்கும் வண்ணமும் இம் மகஜரில்வேண்டப்பட்டுள்ளது.

ஒரு பாவமும் அறியா இச்சீவன்களுள் ஒரு மூன்று வயதுப் பிஞ்சுக் குழந்தையும், 1984 ஆம் ஆண்டு சிறந்த அலுவலருக்கென ஜனாதிபதி விருது வழங்கப்பெற்ற யாழ் கச்சேரி, பிரதான விலைக் கட்டுப்பாட்டுப் பரிசோதகர், திரு. சி. ஜேசுதாசனும் அடங்குவர்.

அண்மையில், பாதுகாப்புப் படையினரின் மட்டுமீறிய செயல்களினால் உயிரிழந்த, ஒரு குற்றமும் அறியாத, பொதுமக்கள் எண்ணற்றோர் உளர். இதே பரிவுடன் பார்க்கப்போனால், அவர்களைச் சார்ந்த நெருங்கிய உறவினருக்கும் போதியவாறு இந்த நஷ்டஈடு வழங்குமாறு மகஜரில் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இனக் கலவரம், அல்லது அத்தகைய தூண்டுதலின் விளைவாக, சனக்கும்பல்களுடைய அடாத செயல்களுக்குப் பலியாகி, இறவாதுவிட்டாலும், வாழ்நாள் முழுவதும் வலுவிழந்தோராக்கப்பட்டவர்களுக்கு, ஏற்ற இழப்பீடோ, மதாந்தத் தருமக் கொடையோ வழங்குமாறும் மகஜரில் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் கேட்டுள்ளார்.

இரு புதிய முத்திரைகள்

(கொழும்பு)

தபால் தொலைத்தொடர்பு அமைச்சு புதிதாக இரண்டு முத்திரைகளை இம்மாதம் வெளியிடவுள்ளது.

கிராமிய எழுச்சி இயக்கத்தின் ஏழாவது வருடத்தைக் குறிக்கும் பொருட்டு ஒன்றும் கொழும்பு இளம் கவிஞர் சங்கத்தின் பொன்விழாவை முன்னிட்டு மற்றதும் வெளியிடப்படுகின்றன. 'கம்முதாவ 85' என்ற தலைப்பிலான இம் முத்திரையின் பெறுமதி அறுபது சதமாகும்.

ஆயர் அதிவண. அம்பலவாணர் பேச்சு:

எதனைக் கைவிட்டுச் சென்றாலும் ஒருபோதும் கல்விச் செல்வத்தை மறந்து விடாதீர்கள்

'மேலைத்தேச கல்வி நுட்பங்களைப் பயிலும் அதேவேளை மகளிர் சமுதாயம் தமிழ்ப் பண்பாடு கலாசாரத்தில் வேரூன்ற வேண்டும். மேலைத்தேச, கீழைத்தேச நற்கூறுகளின் ஒருமைப்பாட்டினை நாம் நாடவேண்டும்' இவ்வாறு தென்னிந்திய திருச்சபை ஆயர் அதிவண. டீ. ஜே. அம்பலவாணர் உடுவில் மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

கல்லூரி அதிபர் செல்வி. சி. வி செல்லையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வண. அம்பலவாணர் பேசுகையில், 'அன்று யூதர்கள் தாக்கப்பட்டு நாட்டைவிட்டு வெளியேறியபோது, அவர்களின் தலைவர் நீங்கள் எத்தகைய செல்வத்தை விட்டுச் சென்றாலும் போகுமிடங்களில் கல்விச் செல்வத்தை மறவாதீர்கள் என்றார். அதேபோல இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்களும் இதனைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மாணவிகள் அனைத்து துறைகளையும் பயில நல்ல வாய்ப்புக்களை கல்லூரி அமைத்துக் கொடுத்தல் அவசியம். மாணவிகள் நல்ல சீலம்மிக்க குலக் கொழுந்துகளாக மலர இவை உதவும்' என்று கூறினார்.

அதிபர் செல்வி சி வி செல்லையா பேசுகையில் ஆங்கில போதனைக்கு தற்போது முக்கியத்துவம்வழங்கப்படுவது வரவேற்கத்தக்கது என்றும், ஆங்கில தேசிய சான்றிதழ் தேர்வும் நல்ல நடவடிக்கையானதால் ஆங்கில போதனைக்கு ஏற்றவகையில் பாடவிதானம் அமைக்கப்படவேண்டும் என்றார்.

செல்வி. கீதாஞ்சலி ஞானப் பிரகாசம் நன்றி கூறினார்— கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

பி.பி.ஸி. நிருபர் பார்வையில் மூதூரின் மல்லிகைத் தீவு

திருமலை மாவட்டத்திலுள்ள 'மல்லிகைத் தீவு' என்ற விவசாயக் கிராமத்தில் தொண்ணூறு வீதமான வீடுகள் எரிக்கப்பட்டிருப்பதை தாம் நேரில் கண்டதாக இப்பகுதிகளின் நிலைமையை நேரில் பார்வையிட்ட லண்டன் டெய்லி ரெலிகிராப் நிருபர் திரு. டேவிட் கிரேவ், பி பி. சியின் உள்நாட்டு ஒலி பரப்பின் "வேள்ட் அற் வண்" நிகழ்ச்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

நிலைமையை நேரில் அவதானிப்பதற்காக தாம் மல்லிகைத் தீவிற்குச் சென்றபோது அப்பகுதி மக்கள் தமது காரைக் கண்டு பயந்து ஓடியதாகவும், பின்னர் அவர்களுக்கு தாம் நிலைமையை எடுத்துக் கூறி அவர்களிடம் விபரங்களைக் கேட்டதாகவும் திரு. கிரேவ் தெரிவித்தார்

கடந்தவாரம் செவ்வாய்க் கிழமை சுமார் இருநூறுபேர் 75 சீருடையினருடன் சென்று கிராமத்தில் வீடு வீடாகத் தமிழர்களை விசாரணை செய்ததாகவும் வீடுகளை எரித்ததாகவும், கிராம மக்கள் திரு. கிரேவுக்கு எடுத்துக் கூறினார்கள். இப்பகுதியில் நான்கு முக்கியமானவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது பற்றியும் அவருக்கு ஆதார பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவங்களின் பின்னர் மல்லிகைத் தீவைச் சேர்ந்த மக்கள் பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் உட்பட பலரும் இராணுவ அட்டகாசத்திற்குப் பயந்து காடுகளிற்குள்ளேயே ஒளிந்திருப்பதாக டேவிட் கிரேவ், 'வேள்ட் அற் வண்' பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அருள் அளிக்கும் அந்தோனி

—அ. அமிர்தறாஜ்—

உனைச் சூழும் பக்தர் படை
தனைச் சூழ்ந்த துன்பம் விடை
தனைச் பெற்றுச் சென்றிடாதோ
தனையிக்கு நீங்கிடாதே
சுனை சுரக்கும் நீரினைப் போல்
அருள் அளிக்கும் அந்தோனி
நினை நினைக்கும் நெஞ்சமெல்லாம்
நிறைவோடு வாழ்ந்திடச் செய்!

தொலைந்து விட்ட பொருளுலகில்
கண்டடையச் செய்பவனே
தொலைத்து விட்டோம் "அமைதி" தனை
தொல்லுலகில் தேடுகின்றோம்.
அலைந்து வந்தோம் எங்குமில்லை
அகதி யென்றோம் அங்குமில்லை.
களைத்து விட்டோம்; காணவில்லை
கண்டெடுத்துத் தந்திடாயோ?

இன்று புனித அந்தோனியார் திருவிழா

இறுதிநாள் உற்சவம்

(குருநகர்)

பாஷையூர் அர்ச். அந்தோனியார் கோவில் வருடாந்த உற்சவம் இன்றுடன் எந்தவித ஆடம்பரமும் இன்றி முடிவடையும். அதிகாலை 5 மணிக்கும் ஆறு மணிக்கும் திருப்பலிப் பூசை ஒப்புவிப்பதுடன் திருநாள் கூட்டுத்திருப்பலிப் பூசை காலை ஏழு மணிக்கு நடைபெற்று மாலை நான்கு மணிக்கு திருச்சொரூபம் ஆலயத்தைச் சுற்றி எடுத்து வரப்பட்டு சொரூப ஆசீர்வாதத்துடன் திருநாள் கொண்டாட்டங்கள் நிறைவு பெறும்.

74 பயணிகளுடன் கடத்தப்பட்ட விமானம்

பெண்கள், குழந்தைகளும் பணயக் கைதிகளாகினர்!

(அம்மான்)

ரியூனிஸ் செல்லும் மார்க்கத்தில் எழுபத்து நான்கு பிரயாணிகளுடன் கடத்தப்பட்ட ஜேர்தானின் போயிங் விமானம் மீண்டும் பெய்ரூட்டில் தரையிறக்கப்பட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது. சிலியில் இவ்விமானம் இறக்கப்பட்டு எரிபொருள் நிரப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. கடந்த செவ்வாய்க்கிழமை இக்கடத்தல் சம்பவம் பற்றிய தகவல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. எனினும் கடத்தியவர்கள் யார்? என்ன நோக்கத்திற்காக இவ்விமானம கடத்தப்பட்டது என்பது தொடர்பான விவரங்கள் உடனடியாகத் தெரிவிக்கப்படவில்லை.

இது இவ்வாறு இருக்க, விமானத்திற்குள் இருக்கும் பெண்களையும் குழந்தைகளையும் விடுவிக்குமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள கடத்தல்காரர்கள் மறுத்து விட்டதாகவும் பிந்திக் கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கிறது.

★ பிந்திய செய்தி

ஷியா முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்த கடத்தல்காரர்கள் பாலஸ்தினிய அகதிகள் சகலரையும் முகாம்களிலிருந்துலெபனான் வெளியேற்றவேண்டுமென நிபந்தனை விதித்துள்ளனர். இம் முகாம்களில் நாற்பதாயிரம் அகதிகள் உள்ளனர். நிபந்தனையின்படி வெளியேற்றப்படாவிட்டால் பணயக் கைதிகள் கொல்லப்படுவர் என்று மிரட்டல் விடுக்கப் பட்டுள்ளது.

கடத்தல்காரர்கள் தம் போக்கில் மிக வன்முறையாக இருப்பதால் சம்பந்தப்பட்டோர் விசனம் கொண்டுள்ளனர்.

சீனத் தலைவர் தீர்மானம்

(பீக்கிங்)

சீனா ஆயுதப்படைகளுக்கான செலவினத்தைக் குறைப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

தமது இம் முடிவினை சீனத் தலைவர் திரு டெங்ஷியோபிங் தெரிவித்துள்ளார்.

ஆப்கான். பட்டினத்திற்குள் 10 ஆயிரம் ரஷ்ய துருப்புகள்

(லண்டன்)

பாகிஸ்தானுக்கு ஒரு இலோ மீட்டர் மாத்திரமே தொலை

வங்கி வேலை ஸ்தம்பிதம்

(பீகிங்)

ஹொங்கொங்கில் வங்கி வேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிலுள்ள ஆப்காவிஸ்தானின் பட்டின மொன்றினை, யுத்த டாங்கிகள், ஹெலிகொப்டர்கள், போர் விமானங்கள் ஆகியவற்றின் ஆதரவுடன், பதாயிரம் துருப்புகள் கொண்டு சோவியத் யூனியன் கைப்பற்றியுள்ளது.

பாகிஸ்தானின் அரசியல் பாதுகாப்புக்கு இது ஒரு பெரும் மிரட்டலாகும் என இராணுவ அவதானிகள் அஞ்சுகின்றனர்.

குஜராத்கலவரத்தில் 170 பேர் பலி; குழப்பம் குறையவில்லை

(குஜராத்)

குஜராத்தில் புதிதாக உண்டான கலவரத்தில் பதினேழு பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் மேற்குப் பகுதி மாநிலமான குஜராத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளை எதிர்த்து உயர் சாதியினர் சமீப காலமாகக் கலவரம் செய்து வருகின்றனர். குழப்பங்கள் குறையவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சமீப காலக் கலவரங்களில் நூற்று எழுபது வரை கொல்லப்பட்டுள்ளனர் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

நமீபியசுதந்திரம்: ஐ.நாவில் இந்தியா வலியுறுத்தல்!

(நியுயோர்க்)

நமீபிய சுதந்திரத்திற்கான நடவடிக்கைகளின் துரிதப்பாடு குறித்து ஐ. நா. பாதுகாப்புச் சபைக்குப் பணிப்புரை வழங்க வேண்டும் என நியுயோர்க்கில் உள்ள பாரதத்துக்கான நிரந்தரத்தூதர் ஐ நா.சபைத் தலைமைச் செயலர் திரு. பொல்டி குவெல்லரிடம் வற்புறுத்தியுள்ளார்.

சென்னையில் நிகழ்ந்த விழாவில் பெருமிதம்

காங். வளர்ச்சிக்கு தமிழகம் ஆற்றிய பணி, தியாகம் பல

(சென்னை)

"காங்கிரஸின் வளர்ச்சிக்கு தமிழ் நாட்டவர் ஆற்றிய பணியும், தியாகங்களும் மகத்தானவை" என்று நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்ற காங்கிரஸின் நூற்றாண்டுவிழா நிகழ்ச்சியில் பேசிய பல பெருந் தலைவர்களும் கூறினர்.

இவ்விழாவில் கட்சியின் பொதுச் செயலாளர் திரு ஜி. கே மூப்பனார் மாஜி முதல்வர் திரு எம் பக்தவத்சலம், திரு சிவாஜி ணேசன் எம். பி, திருமதி வைஜயந்திமாலா எம். பி முதலான பலரும் கலந்து கொண்டனர்.

ரஷ்யாவின் அறிவிப்பு

(மாஸ்கோ)

அமெரிக்காவுடனான ஆயுதக் கட்டுப்பாட்டு உடன்படிக்கையில் மாற்றமிராது என சோவியத் யூனியன் அறிவித்துள்ளது

எனினும் தனது நிலையில் தான் விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்றும் சோவியத் கூறியுள்ளது.

COLOMBO - BERLIN

உடனடியான பயண ஒழுங்குகள்

★ குறைவான கட்டணங்கள்

★ நம்பிக்கையைத் தரும் சேவை

★ யாழ்ப்பாணத்தில் இருந்தபடியே பயணத்துக்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்யலாம். பணத்தைக் கொழும்புக்கு எடுத்துச் செல்லத் தேவையில்லை.

★ கட்டுநாயக்காவரை எமது பிரதிநிதி உங்களுடன் வந்து எல்லா உதவியும் செய்வார்.

★ கொழும்பில் நல்ல தங்குமிட வசதி. உணவு வசதி. கட்டுநாயக்கா செல்லப் பிரயாண ஒழுங்கு ஆகியவற்றை நாம் செய்து தருவோம்.

★ பயணக் காசோலைகளைச் சிரமமில்லாமல் பெற நாம் உதவி செய்வோம். பணத்தைக் கொழும்புக்கு எடுத்துச் செல்லத் தேவையில்லை.

சிங்கப்பூர் ஊடாகப் பெர்லின் செல்லும் வசதியை ஒவ்வொரு வியாழக்கிழமையும் 20 பயணிகளுக்கு மட்டும் ஏற்படுத்தித் தருவோம். இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புவோர் நேரத்துடன் தமது ஆசனங்களைப் பதிவுசெய்துகொள்ளவும்.

Dyn. Ads

Confirmation, Re-confirmation, Cancellation ஆகிய பணிகளையும் நாம் கவனிப்போம்.

இந்தியப் பிரயாணம்: இந்தியாவுக்கு விசா, கடவுச் சீட்டு, கடவுச்சீட்டுப் புதுப்பித்தல், மொண்ட் ஆகியவற்றுக்கான சகல ஒழுங்குகளையும் செய்து தருவோம்.

உலகின் எப்பகுதிக்கும் எம்மிடம் விமானச் சீட்டுக்கள் பெறலாம்.

மேலதிக விபரங்களுக்கு எமது அலுவலகத்தில் திருமதி சாவித்திரிதேவி பாலசிங்கம் அவர்களுடன் தொடர்புகொள்க.

MACK TRAVELS LTD.

இல. 8, முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 24791

கிளைகள்: QUICKS ENTERPRISES— TRAVELS AND TOURS 533, ஸ்ராண்லி வீதி, யாழ்ப்பாணம்.

QUICKS TRAVELS AND TOURS சரவணை தோட்டம், Church Road சாவகச்சேரி. Tel, 273

A/L 87 ஆரம்பம் 15.6.85

சனி காலை 9.30 மணி

(எமது வழமையான ஆசிரியர்கள்)

தூய பிரயோக கணிதம்

திரு. நல்லையா

86, 87 புதிய பிரிவுகள்

ஆரம்பம்:

15-6-85 சனிக்கிழமை

NEW MASTER INSTITUTE

B M C Lane, JAFFNA.

ஈழமுரசு

60000 தோட்ட தொழிலாளரின் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது!

கடந்த திங்கட்கிழமை முதல் சுமார் அறுபதாயிரம் தோட்டத் தொழிலாளர்கள் கலந்து கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் வேலை நிறுத்தம் நேற்றுடன் கைவிடப்பட்டது. காங்கிரஸின் தலைவர் அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி ஆகியோர் நேற்று முன்தினம் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பலனாகவே வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. தலவாக்கொல்லையில் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டதையடுத்து வேலை நிறுத்தம் ஆரம்பமானது.

தயவு செய்து திருப்பி ஒப்படையுங்கள்:

அரிசிக் கொள்ளைச் சம்பவம் எமக்கு அழிவை தேடித் தரும்

தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் அறிக்கை

அரிசிக் கொள்ளை போன்ற செயல்கள் எமக்கு அழிவையே தேடித்தருமென்றும், எனவே கொள்ளையடித்த உணவுப் பொருட்களை திருப்பிக் கொடுக்குமாறும் யாழ் தேசிய கூட்டுறவுச் சபை, தெல்லிப்பளை பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவைகளின் தலைவரான திரு. சிவமகாராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவ்வேண்டுகோளின் விபரம் வருமாறு:

இதுவரை காலமும் யாழ் மாவட்டத்திலே உணவுத்தட்டுப்பாடு ஏற்படாமல் இருந்தமைக்கு காரணம் இந்த உணவுக் களஞ்சியங்கள் உணவுப் பொருட்கள் சேமித்து வைக்கப் பட்டிருந்தமைதான் என்பதை எல்லோரும் நன்கு அறிவர்.

புகையிரத சேவை, வீதிப் போக்குவரத்து தடைப்பட்டிருக்கும் இவ்வேளையில் யாழ் அரசாங்க அதிபர், உணவுக் கட்டுப்பாட்டு உயர் அதிகாரிகள் எடுத்து வந்த அயராத முயற்சியின் பயனாகத்தான் கூட்டுறவுச் சங்கங்கள் இதுவரை காலமும் உணவுப் பொருட்கள் தட்டுப்பாடின்றி வழங்கக் கூடியதாக இருந்தது.

இப்பொழுது உணவுக்களஞ்சியத்திலேயே கைவைக்கப் பட்டுவிட்டது. இச்செயலால் உணவுத் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது. அதுமட்டுமன்றி உணவுக்களஞ்சியத்தில் வேலை செய்பவர்களும் பாதிக்கப்படுவார்கள். அவர்கள் வேலையே இழக்க வேண்டிய நிலையும் ஏற்படலாம். இனிமேல் உணவுப் பொருட்கள் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுப்பிக்க முடியாமல் போய்விடும். இதுவரை காலமும் யாழ் அரசாங்க அதிபரும், உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிகளும் எடுத்து வரும் முயற்சிகளுக்கு கடும் குந்தகம் ஏற்படலாம். இம் மாவட்டத்திலே உணவுப் பிரச்சினை பெரும் பிரச்சினையாகத் தோன்றலாம்.

ஆகவே குருநகர் உணவுக் களஞ்சியத்தில் எடுக்கப்பட்ட அரிசியை திருப்பி ஒப்படைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களை கேட்டுக்கொள்கின்றேன். இப்படியான செயல் எமக்கு அழிவைத்தான் தேடித்தரும் என்பதை அனைவரும் உணர வேண்டும். இந்தக் கருஞ்சியங்களில் இருந்து விநியோகிக்கப்படும் உணவுப் பொருள் முக்கியமாக ஏழை மக்களுக்கு உணவு முத்திரை மூலம் உணவுப் பொருட்களைப் பெறுபவர்களுக்குத்தான் கிடைக்கிறது.

உணவு விநியோகத்தில் ஈடுபட்டிருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் உணவுக் களஞ்சியங்களைப் பாதுகாப்பது ஒவ்வொருவரதும் கடமையாகக் கொள்ளவேண்டும். தமிழ் மக்களின் முன்னேற்றத்தில், அக்கறை கொண்டு உழைக்கின்ற ஒவ்வொரு தமிழ் மகனும் உணவுப் பொருட்களை பாதுகாக்க ஒத்துழைப்பு நல்க வேண்டுமெனவும் திரு. சிவமகாராசா தெரிவித்துள்ளார்.

துணைவேந்தர் 'வித்தி'யின் செய்தி:

பனை பற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படும்

யாழ். பல்கலைக் கழகத்தில் இன்று ஆரம்பமாகும் பனை வள கண்காட்சியும், கருத்தரங்கும் மக்களிடையே பனை பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த உதவுமென துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

இச்செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

கிராமியப் பொருளாதாரத்திலும், மக்கள் வாழ்விலும் குறைந்த முயற்சியுடன் கூடிய பயனைத் தந்துள்ள தாவரமாகப் பனை அமைந்துள்ளது. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் ஏற்பட்டு வந்த பல பொருளாதார சமுதாய மாற்றங்களின் விளைவாகப் பனையின் உபயோகங்கள் பல குறையத் தொடங்கியிருந்தன.

பனையின் பல் வேறு உபயோகம் தொடர்பாக எமது கிராமத்தவர்களிடையே ஐம்பது வருடங்களுக்கு முன்னர் இருந்த நிலையினையும் இன்றைய நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து இந்த மாற்றம் நன்கு அறியக் கூடியதாக இருக்கும். இத்தகைய ஒரு பின்னணியிலேதான் இன்று பனை வளம் பற்றிச் சிந்திக்கப்படுகின்றது.

பனை வள அபிவிருத்தியினைத் தற்காலத் தேவைகளையும் நிலைமைகளையும் கவனத்திற்கொண்டே திட்டமிடுதல் வேண்டும். பனை அபிவிருத்திச் சபையின் தொழிற்பாடுகளும் திட்டங்களும் இவற்றினை உள்ளடக்கிய வகையில் அமைந்துள்ளது வரவேற்கத்தக்கது.

சபைத் தலைவரின் செய்தி

1983ல் நடைபெற்ற சர்வதேச ரீதியிலான தொழிற்பாட்டு மகாநாட்டு ஆய்வரங்கின் பெறுபேறு காரணமாக ஐக்கிய நாடுகள் சபையின்கீழ் இயங்கும் ஐ. நா. அபிவிருத்தித் திட்ட உலக உணவு விவசாய நிறுவனம் பனைவள ஆராய்ச்சிக்கான திட்டமொன்றை அங்கீகரித்து இதற்கென மூன்றுலட்சம் டொலரை நிதியாக வழங்க முன் வந்துள்ளது. இதே நேரத்தில் பனை அபிவிருத்திச் சபையின் உற்பத்திகள் நாட்டில் பிரபல்யம் பெறத்தொடங்கியுள்ளன. பொருத்தமான இச்சந்தர்ப்பத்தில் பல்கலைக்கழகத்திலும் பேராசிரியர்கள் இளைஞர்கள் முன்னால் சபை தனது பிரச்சினைகளையும் சாதனைகளையும் முன் வைக்கிறது என்று பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. க. நடராசா தமது செய்தியில் தெரிவித்துள்ளார்.

தரமான
தங்க - வைர நகைகளை
எண்ணம் போல்
தெரிவு செய்ய
யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்
(வின்ஸர் தியேட்டருக்கு முன்)
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

வெரித்தாஸ்,,,

...1ஆம் பக்கத் தொடர்

தமிழ்த் தீவிரவாதிகள் சென்ற படகு ஒன்றைத் தாக்கியதாகவும், இதில் ஏழு தீவிரவாதிகள் பலியானதாகவும் சென்னைத் தகவல் ஒன்று கூறுவதாக வெரித்தாஸ் வானொலி நேற்றிரவு அறிவித்தது.

கிராமிய பாராளு,,

பட்ட கிராமங்களை எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகளை கிராம மட்டத்தில் தீர்த்து வைப்பதற்கு உதவியாக அமையும். உதவி அரசங்க அதிபர் பிரிவுகளில் இருந்து இந்தக் கிராமியப் பாராளுமன்ற அமைப்புக்குப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் அதிகாரம் கிராம மக்களுக்கு வழங்கப்படும்.

இம்மாதம் 10-ம் திகதிவரை

21750 புதிய தமிழ் அகதிகள் தமிழகம் சென்றுள்ளனர்

(சென்னை)

இம்மாதம் பத்தாம் திகதி வரையில் 21,750 புதிய தமிழ் அகதிகள் இலங்கையில் இருந்து தமிழகம் சென்றடைந்துள்ளதாக தமிழக மறுவாழ்வுத்துறை அமைச்சர் திரு. எம். ராமசாமி சட்டசபையில் நேற்றுத் தெரிவித்தார்.

15,658 அகதிகளை பரவலாக பல்வேறு மாவட்டங்களிலும், 66,492 பேரை திருச்சி மண்டபம் ஆகிய இடங்களிலுள்ள முகாம்களிலும் தங்க வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை அகதிகளுக்காக கட்டப்பட்ட 728 குடியிருப்பு வீடுகளில் 261 வீடுகள் பழுதடைந்திருப்பதாகவும் இவற்றை திருத்த 18,30,000 ரூபா செலவிடப்படும் எனவும் அவர் கூறினார்.

யாழ் பல்கலைக்கழ...

...1ஆம் பக்கத் தொடர்

கலைக் கழகப் பேராசிரியர் திரு. கே. குணரத்தினம் பல்கலைக் கழக மாணவர் பொது மண்டபத்தில் திறந்து வைப்பார். 15-ம் திகதி சனிக்கிழமை காலை யாழ் பல்கலைக் கழகத் துணை வேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் கைலாசபதி கலை அரங்கில் ஆய்வுக் கருத்தரங்கை ஆரம்பித்து வைப்பார்.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. நடராசா ஆரம்ப உரையை நிகழ்த்துவார். ஆய்வுக் கருத்தரங்கில் பனை அபிவிருத்திச் சபைப் பொது முகாமையாளர் கலாநிதி சு. மோகனதாஸ் 'பனை அபிவிருத்திச் சபையின் தொழிற்பாடுகள்' பற்றிப் பேசுவார், பல்கலைக் கழக பல்வேறு அறிஞர்களும் பனை சார்ந்த ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கவுள்ளனர்.

பல்கலைக் கழக மட்டத்தில் நடைபெறும் முதலாவது பனை வள ஆய்வுக் கருத்தரங்கு இதுவேயாகும்.

நன்மை விரும்பி,,,

...1ஆம் பக்கத் தொடர்

எது. இவர்கள் தொடர்ந்து எடுத்துவரும் முயற்சியால் மேலும் பல அரிசி மூடைகள் மீட்கப்படலாமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

கண்ணி வெடிக்கு....

தில் தமிழ் தீவிரவாதிகள் புகுந்து கிராம மக்களைக் கொன்றதாகவும், ராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் பலியானதாகவும் அரசாங்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவங்களை அடுத்து மூதூர் பகுதியிலுள்ள கிராமங்களில் வாழும் தமிழ் மக்கள் அச்சத்தால் காடுகளுக்குள் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இத்தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மேற்கொண்டிருக்கலாம் என்றும் அரச அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விமானம்,,,

...1ஆம் பக்கத் தொடர்

குண்டு வைத்து தகர்க்கப்பட்டது. அதற்கு முன்னர் பயணிகள் விடுவிக்கப்பட்டனர். எட்டு ஜேர்தான் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும், மூன்று விமான ஓட்டிகளுக்கும் என்ன நடந்தது என்று தெரியாது. கடத்தல்காரர்கள் ஜீப்ஒன்றில் தப்பிச்சென்றனர்.

இன்று

(அரியாலை)

அச்சுவேலி வளலாய் ஸ்ரீ சித்திவிநாயகர் கோவிலின் வருடாந்த மணவாளக் கோலமகா சங்காபிஷேகம் இன்று வியாழக்கிழமை நடைபெறும்.

இன்று துணிகள் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு கடலில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட முப்பத்தாறு குடும்பங்களுக்கான துணிவகைகளை யாழ். செஞ்சிலுவைச் சங்கம் வழங்கவுள்ளது. சம்பந்தப்பட்ட குடும்பங்களின் உரிமையான பிரதிநிதிகள் இன்று காலை பத்து மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய வீடமைத் திணைக்களத்தில் வந்து தவறாது பெற்றுக் கொள்ளுமாறு நடுந்தீவு பிரஜைகள் குழு கேட்டுக்கொண்டுள்ளது.

தாக்குதலை ....

தொடர்ச்சியாக நடத்துவதற்குத் திட்டமிட்டிருப்பதாக அரசாங்கத்திற்கு தகவல் கிடைத்திருப்பதாகவும் இதனால் நாடு பூராவும் பலத்த கண்காணிப்பு மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

இந்திய அரசினாலும், தமிழக மற்றும் இந்திய அரசியல் தலைவர்களின் வற்புறுத்தலினாலும் வடக்கு கிழக்கு பகுதிகளில் வன்செயல்கள் குறையலாம் என்று தெரிவித்த அமைச்சர் அல்வின், வன்செயல்கள் அற்ற அமைதியான ஒரு சூழ்நிலையே பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவும் என இந்தியத் தலைவர்கள் உணர்ந்து கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

எனினும் கிழக்கில் இடம் பெற்றுவரும் வன்செயல்கள் பற்றி அமைச்சர் குறிப்பிடுகையில் பிரபாகரன் தலைமையிலான புலிகள் இயக்கத்தாலேயே இப்பகுதியில் நெருக்கடி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று கூறினார்.

ராஜீவுக்கு,,...

பாரதப் பிரதமருக்கு வெள்ளை மாளிகையில் மிகவும் ஆடம்பரமான வரவேற்பு அளிக்கப்பட்டது. நேற்றிரவு ஜனாதிபதி றீகன், ராஜீவ் தம்பதிகளுக்கு விருந்தளித்துக் கௌரவித்தனர்.

நேற்றிரவு இரு தலைவர்களும் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தனர்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோகியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. 13-6-1985 வியாழக்கிழமை தொலைபேசி: 23336.